**மூன்றாம் நிலைப் பராமரிப்பு மையத்தில் ஒருங்கிணைந்த தரவுத் தளத்தைப் பயன்படுத்தி கோவிட் தொற்று சந்தேகிக்கப்படுகின்ற அல்லது உறுதியாகியுள்ள நபர்கள் பற்றிய உற்றுநோக்கல் பயிலுகைகள்.**

**வயதுவந்தோர்க்கான நோயாளித் தகவல் தாள்**

கோவிட்-19 என்றும் அறியப்படுகின்ற கொரோனா வைரஸ் தொற்று நமது நாட்டில் மிகவிரைந்து பரவி வருகிறது. இதுவரை நமக்குத் தெரிந்ததெல்லாம் அது சுவாச மண்டலத்தை முக்கியமாக பாதிக்கின்ற வைரஸ் என்பதுதான். நோயறிகுறியுள்ள நோயாளிகள் காய்ச்சல், இருமல், மூச்சுத்திணறல் ஆகியவற்றுடன் வருகிறார்கள். ஆனால் தொற்றுவயப்பட்ட மிக அதிக எண்ணிக்கையிலான நோயாளிகளுக்கு எந்த அறிகுறியும் இல்லை, அல்லது மிக மென்மையான உடல்நலமின்மையே காணப்படுகிறது. மிக அபூர்வமாக நோயாளிகள் மோசமாக நோய்வாய்ப்பட்டிருந்தால், தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பது தேவைப்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்று, ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒரு புதிய நோய் ஆகும். இந்நோயின் நோய்உடற்கூறியல், இயல்பான பரவுமுறை, சிகிச்சைத் தெரிவுகள் பற்றிய மருத்துவச் சகோதரர்களின் அறிவு மிகக் குறைவாக உள்ளது. இந்த ஆய்வில் பங்கேற்குமாறு உங்களை அழைத்திருந்தால், நீங்களோ உங்கள் குடும்ப உறுப்பினர் ஒருவரோ சுவாசக் கோளாறுடன் வந்திருக்க வேண்டும். உங்களுக்கு கோவிட் தொற்று இருப்பதாகச் சந்தேகம் அல்லது உறுதிப்பாடு ஏற்பட்டிருக்க வேண்டும். எங்கள் நிறுவனத்தில் வெவ்வேறு மருத்துவச் சிறப்பு திட்டங்கள் இந்த நோயை நாங்கள் மேலும் நன்கு புரிந்துகொள்ள உதவுமாறு நடத்தப் படுகின்றன. அவற்றின் ஆய்வுப் பயிலுகைகளில் நீங்கள் பங்கேற்குமாறு நாங்கள் வேண்டுகிறோம். உங்கள் பங்கேற்பு இதே போன்ற நோயாளிகளை நாங்கள் மேலும் சிறப்பாக கவனிக்க உதவிசெய்யும்.

பின்வரும் தகவலை கவனத்துடன் படிக்க நேரம் செலவிட வேண்டுகிறோம். உங்களுக்கு ஏதேனும் தெளிவின்றி இருந்தால் அல்லது மேலும் தகவல் தேவைப்பட்டால் கேளுங்கள். பங்கேற்பதா இல்லையா என்பதை முடிவு செய்ய நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்.

**இந்த ஆய்வு எதைப்பற்றியது?**

உங்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று இருப்பதாக நாங்கள் சந்தேகப்படுவதால் அல்லது நிச்சயித்திருப்பதால் உங்களை இந்த ஆய்வில் பங்கேற்குமாறு கேட்டிருக்கிறோம். கோவிட் வைரஸ் மனித உடலில் பாதிக்கின்ற பலவேறு தன்மைகளைக் காண்பதற்கு மருத்துவமனையின் பலவேறு துறைகள் நடத்துகின்ற வெவ்வேறு ஆய்வுகளும் இந்த ஆய்வுக்குள் அடங்கும்.

**நான் பங்கேற்கத்தான் வேண்டுமா?**

*நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். ஆய்வைப் பற்றி நாங்கள் உங்களுக்கு விவரிப்போம். கூடுதல் தகவல்கள் இந்தத் தகவல்தாளில் கிடைக்கும். நீங்கள் பங்கேற்பதற்கு ஒப்புதல் அளித்தால் அதற்கு ஒப்புதல் படிவம் ஒன்றில் கையெழுத்திடுமாறு கேட்போம். நீங்கள் எந்தக் காரணமும் கூறாமல் எப்போது வேண்டுமானாலும் ஆய்விலிருந்து விலகிக் கொள்ள உரிமை உண்டு. அதனால் உங்களுக்கு அளிக்கப்படும் கவனிப்பின் தரம் சற்றும் பாதிக்கப்படாது.*

**ஆய்வின்போது என்ன நிகழும்?**

*ஆய்வுக்கு ஒப்புதல் அளித்தால் நீங்கள் பின்வரும் தகவலை எங்களுடன் பகிர்ந்துகொள்ளவும் மருத்துவ மனையில் நீங்கள் தங்கியிருக்கும் காலத்தில் தேவைப்பட்ட மாதிரிகளை எடுத்துக் கொள்ளவும் அனுமதி அளிக்கிறீர்கள்.*

1. *பங்கேற்பாளர் தகவல்கள் (உங்கள் வயது, பாலினம், மணநிலை, சமூகபொருளாதார அந்தஸ்து, தங்கியிருக்குமிடம் போன்றவை)*
2. *மருத்துவமனைக்கு வரக் காரணமான உங்கள் சிகிச்சை வரலாறு*
3. *தேவையான (பொருத்தமிக்க) வரலாறு*
   i. *கொரோனா வைரஸ் தாக்கிய அறியப்பட்ட நோயாளியின் பயண மற்றும் உடல்மறைப்பற்ற தன்மை வரலாறு*
   ii. *மருந்தளிப்புகளின் வரலாறு*
   iii. *இணைநோய்களின் வரலாறு*
4. *ஆய்வக மாதிரிகள்*
   i. *இரத்தம்: வழக்கமான இரத்த மாதிரிகள் அன்றி, வைரஸ் தொற்று தொடர்பான சிறப்புச் சோதனைகளுக்கும் இரத்தம் சேகரிக்கப்படும். இதில் வைரஸின் ஆன்டிபாடி (கிருமியெதிரி) நிலை, வைரஸின் சுமை, நோய் எதிர்ப்பு வினை, உடல்செயல்பாடுகளை கணிக்கத் தேவையான இரத்தச் சோதனைகள் ஆகியவை அடங்கும்.*
   ii. *துடைப்புத்துணி: சுவாச மாதிரிகளில் நிகழ்த்தப்பட்ட ஆர்டி-பிசிஆர் சோதனையில் இந்த வைரஸ் கண்டறியப்படுகிறது. இந்த மாதிரியை மூக்கு, வாய், மூச்சுக்குழாய்வழி ஆகிவற்றிலிருந்து எடுக்கலாம். (மோசமாகும் நுரையீரல் நிலையால் நோயாளி மூச்சுக்குழல் குழாய் செலுத்தப்பட்டிருந்தால் மட்டுமே மூச்சுக்குழாய்வழி மாதிரி எடுக்க வேண்டும்.)*
   iii. *டயாலிசிஸ் கழிவு: மிக அபூர்வமான சந்தர்ப்பங்களில் சிறுநீரகச் செயலிழப்புக்காக டயாலிசிஸ் தொடங்கப்பட்டால் அதிலிருந்து நீக்கப்படும கழிவுநீர் சேமித்து வைக்கப்பட்டு வைரஸ் சோதனைக்குப் பயன்படுத்தப்படலாம்.*

எடுக்கப்படும் இரத்தம் மிகக்குறைவாகவே இருக்கும், அது உங்களுக்கு எவ்வித முக்கிய அசவுகரியத்தையும் உண்டாக்காது என்று நாங்கள் உறுதியளிக்கிறோம். எல்லா மாதிரிகளின் சேகரிப்பும் அனுபவம் மிக்க உடல்நலப் பணியாளர்களால் மட்டுமே செய்யப்படும்.

5. பிற புலனாய்வுகள்:

   நுரையீரல் மற்றும் இதயச் செயல்பாட்டை அறிய, மார்புக்கூட்டு எக்ஸ்ரே, சிடி ஸ்கேன்கள், எக்கோ-கார்டியோகிராம்கள் (இதயச் செயல்பாட்டைக் காட்டக்கூடியவை) ஆகிய கதிரியக்க பிம்பம்சார்ந்த சோதனைகள் நீங்கள் மருத்துவமனையில் தங்கியிருக்கும்போது நிகழ்த்தப்படக்கூடும். இந்தச் சோதனைகள் யாவும் மருத்துவத்தில் குறுக்கிடாதவை, உங்களை காயப்படுத்தாது.

6. மருத்துவமனையில் உங்களுக்கு மருந்தளிக்கும் முறை நன்கு கண்காணிக்கப்பட்டு, தரவுத்தளத்தில் பதியப்படும்.
7. மருத்துவமனையிலிருந்து வெளியேறிய பிறகு, உங்கள் உடல்நல நிலை பற்றி அறியத் தொலைபேசியில் தொடருவோம்.

**நான் பணம் செலுத்த வேண்டிய கூடுதல் செலவுகள் ஏதேனும் உள்ளனவா?**

நீங்களோ உங்கள் நோயாளியோ இந்த ஆய்வில் இருக்கும்போது கூடுதல் செலவுகள் ஏதும் இல்லை. ஆய்வு நோக்கத்துக்காகக் கூடுதலாகச் செய்யப்படும் சோதனைகளுக்கு நிறுவனே செலவைக் கொடுத்துவிடும். இது ஒரு உற்றுநோக்கு ஆய்வுத் திட்டம் என்பதால், பங்கேற்புக்காக கூடுதல் செலவுகளோ, ஈடுசெய்தல்களோ இல்லை.

**இந்த ஆய்வில் பங்கேற்பதால் சாத்தியப்படும் பிரதிகூலங்களோ அபாயங்களோ ஏதேனும் உண்டா?**

இரத்தமாதிரி சேகரிக்கும்போது உள்ள குறைந்தபட்ச அசவுகரியமன்றி, பங்கேற்பதில் வேறு பிரதிகூலங்களோ அபாயங்களோ எதுவும் இல்லை. நீர் துடைப்புகள், இரத்த மாதிரி சேகரிப்பு, மார்புக்கூடு எக்ஸ்ரே, எக்கோ-கார்டியோ கிராம் ஆகியவை நன்கறியப்பட்ட மருத்துவச் செயல்பாடுகள், இவை பல பத்தாண்டுகளாக நடைமுறையில் இருப்பவை.

**பங்கேற்பதால் சாத்தியமான அனுகூலங்கள் என்ன?**

இந்த ஆய்வு நோயாளிக்கு (உங்களுக்கோ உங்கள் குடும்ப உறுப்பினருக்கோ) எந்தப் பலனும் தரும் என்று கூற முடியாது. ஆனால் இந்த ஆய்வின் மூலமாக நாங்கள் பெறும் தகவல் மற்ற நோயாளிகளுக்கு உதவக்கூடும், இந்தப் புதிய தொற்றினை மேலும் புரிந்துகொள்ளவும் அதனோடு தொடர்புடைய சிகிச்சை மேம்பாட்டிற்கும் உதவக் கூடும்.

**இந்த ஆய்வில் நான் பங்கேற்பது அந்தரங்கமாக வைக்கப்படுமா?**

*ஆய்வின்போது உங்களைப் பற்றிச் சேகரிக்கப்படும் தகவல் யாவும் மிகவும் இரகசியமாக வைக்கப்படும். மருத்துவமனையைவிட்டு வெளிச்செல்லுகின்ற உங்களைப் பற்றிய தகவல் எதுவும் உங்கள் பெயரும் முகவரியும் இல்லாமல்தான் செல்லும் ஆகையால் நோயாளி யார் எனத் தெரியாது.*

*இந்த ஆய்வின் தகவல்கள் மின்னணுமுறையில் சேகரிக்கப்படும், கடவுச் சொல்லினால் காப்பாற்றப்படும். ஆய்வாளருக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய கடவுச்சொல் பாதுகாப்புக் கணினியில் பங்கேற்போரை ஆய்வுக் குறியீடுகளுக்குப் பொருத்தக்கூடிய ஒரு மாஸ்டர் லிஸ்ட் (முக்கியப் பட்டியல்) வைக்கப்பட்டிருக்கும்.*

***இந்த ஆய்விலிருந்து நான் விலகினால் என்ன ஆகும்?***

*ஆய்விலிருந்து நீங்கள் விலகினால் அன்றுவரை உங்களிடமிருந்த எல்லாத் தகவல்களும் தரவுகளும் அழிக்கப்படும். உங்கள் பெயர் ஆய்வுக் கோப்புகளிலிருந்து நீக்கப்படும். இது உங்கள் சிகிச்சையை எவ்விதத்திலும் பாதிக்காது. ஆய்விலிருந்து விலகுவதற்கு எவ்வித அபராதமும் இல்லை.*

***இந்த ஆய்வுப் பயிலுகையின் முடிவுகள் என்ன ஆகும்?***

*இந்த ஆய்வுப் பயிலுகையின் முடிவுகள் ஒன்று திரட்டப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படும். இந்தத் தரவுகள் பிரசுரிக்கப்பட்டால் அல்லது காட்சிப்படுத்தப் பட்டால் எந்த வடிவத்திலும் நோயாளியால் அடையாளம் காணப்பட முடியாததாக இருக்கும்.*

***இந்த ஆய்வினை ஒருங்கிணைப்பவர், அல்லது இதற்குப் புரவலராக இருப்பவர் யார்?***

*இந்த ஆய்வுத்திட்டத்திற்கு நிதியுதவி செய்வது வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரி மட்டுமே. இந்தத் திட்டத்தின் ஆய்வுகளுக்கு மிகமிக அபூர்வமாகவே வெளி நிதியுதவி அமைப்புகள் நிதியளிக்கின்றன.*

***உங்களுக்கு மேலும் சந்தேகங்கள் அல்லது கேள்விகள் இருப்பின், பின்வரும் தொடர்பு எண்ணில் விசாரிக்கலாம். ஓர் தொழில்முறை நிபுணர் உங்கள் கேள்விகளுக்கு விடை தருவதற்குத் தயாராக இருப்பார்.***

தொலைபேசி எண் : 9385285975.

*டாக்டர் அபி மனீஷ்* (Dr. Abi Manesh ) *டாக்டர் கார்த்திக் ஜி.* (Dr. Karthik G)

*தொற்றுநோய்கள் துறை*
*மருந்தியல் துறை* 5